மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர்
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.கொ.வீரராகவராவ், இ.ஆ.ப.,

---

ந.க.எண்: 769/2016/A5 நாள்: 09.08.2017

---

பொருள்: வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி - 2016-17 நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மதுரை - மதுரை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகள் - இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க பயிற்சி நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டது - வேலை உத்தரவு வழங்குதல் - உத்தரவிடல்.

பார்வை:

1. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.4151/TNULM/ 2016, நாள்: 18.10.2016.
2. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் கடித ந.க.எண்.769/ 2016/அ5, நாள்:13.3.17
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.3929/ NULM/16 நாள்: 11.01.17
4. தொழிற் பயிற்சி நிறுவனங்களின் கருத்துருக்கள்
5. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் கடித ந.க.எண்.769/ 2016/அ5, நாள்:23.3.17 மற்றும் 06.06.2017

*****

**உத்தரவு:-**

மதுரை மாவட்டத்தில் 2016-17ம் நிதியாண்டில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் பணி அமர்த்துதல் மூலம் வேலைவாய்ப்பு (EST&P) திட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள இளைஞர்களுக்கு வழிகாட்டி நெறிமுறையின்படி, பயிற்சி வழங்கிட, பார்வை 1& 3ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது கீழ்காணும் நிறுவனம் மாவட்ட செயல்பாட்டுக் குழு Task Force Committee மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

Elysium Technologies Private Limited, Madurai-20

எனவே அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 30 இளைஞர்களுக்கு கீழ்க்கண்டவாறு பயிற்சி அளிக்க வேலை உத்தரவு வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**Training Institutes Identified for imparting EST&P Training**

| S. No | Name of the PIA Institute | Name of the Trade | | Duration (in Hrs) | | | | | No. of Days | No. of Youth to be trained | Institute |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | *Trade Name* | *Trade Code* | Theory | Practical | OJT | Soft Skill | Total Hours | | | |
| 1. | Kalvi Trust Educate to Empower, Madurai-20 | Accounts Assistant using Tally | ICT 701 | 138 Hrs | 167 Hrs | 181 Hrs | 90 Hrs | 576 Hrs | 72 days | 30 | 15000 |

**பயனாளிகள் தேர்வு:-**

1. பயிற்சி நிறுவனத்திற்கான பயிற்சியாளர்களை மாவட்ட திட்ட செயலாக்க அலகு, மகளிர் திட்டம் மூலம் மதுரை மாவட்ட மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளை சார்ந்த ஏழை குடும்பங்களில் உள்ள இளைஞர்களை கண்டறிந்து பகுதி அளவிலான கூட்டமைப்பு / சுய உதவிக் குழுக்கள் பரிந்துரை செய்யும்.

**பயிற்சியாளர்களின் வயது வரம்பு:-**

அ) இளைஞர்களுக்கு 18 முதல் 35 வரை.

ஆ) மகளிர்க்கு 40 வரை.

இ) மாற்றுத்திறனாளி மற்றும் மலைவாழ் பகுதியினருக்கு உச்சகட்ட வயது வரம்பு 45.

றுவன நிபந்தனைகள்:-

1. ஒவ்வொரு பயிற்சியும் தொடர்ந்து குறைந்தபட்சம் 3 மாத காலம் நடத்தப்பட வேண்டும்.
2. பயிற்சியானது முழுநேர பயிற்சியாக நடத்தப்படவேண்டும். பகுதி நேர பயிற்சியாக இருக்கலாகாது.
3. பயிற்சி நிறுவனம் பயோ மெட்ரிக் வருகைப் பதிவேடு பயிற்றுநர் மற்றும் பயிற்சியாளர்களுக்கும் பராமரிக்கப்படவேண்டும். மேலும், இதனை இ.மெயில் மூலம் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலகத்திற்கு தெரிவிக்கவேண்டும்.
4. பயிற்சி அறை CCTV-யில் முழுமையான பதிவு செய்தல் வேண்டும்.
5. பயிற்சியாளர்களுக்கு அடையாள அட்டை, பாடத்திட்டத்தின் நகல் வழங்க வேண்டும். பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உபகரணங்கள் வழங்க வேண்டும்.
6. நிறுவனக்கட்டணத்தில் பயிற்சியாளர்களுக்கு நோட்டு, பாடப்புத்தகம், தேவைப்படும் மூலப்பொருட்கள் வழங்கவும் மற்றும் மதிப்பீட்டு தேர்வுக்கான கட்டணம் செலுத்தப்படவும் வேண்டும்.
7. பயிற்சி ஆரம்பிக்கப்பட்டவுடன் பயிற்சி நிறுவனமானது பயிற்சி பெறுபவர் விபரங்களை online-ல் பதிவு செய்திட வேண்டும்.
8. பயிற்சி நிறுவனங்கள் வழங்கும் பயிற்சியானது NCVT/SSC நிறுவன ஒப்புதல் பெற்ற பாடத்திட்டத்தின்படி மட்டுமே வழங்கிட வேண்டும்.
9. பயிற்சி தொடங்கியவுடன் பயிற்சி எந்த பாடத்திட்டத்தின்படி நடைபெறுகிறது என்பதனை Course Code எண்ணுடன் திட்ட செயலாக்க அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
10. பாடத்திட்டமானது Soft Skills, அடிப்படை ஆங்கிலம் மற்றும் அடிப்படை கணினி செயல்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
11. வாராந்திர பயிற்சி முன்னேற்ற அறிக்கை மாவட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
12. வெளி நிறுவனங்களில் செயல்முறை பயிற்சிக்கு (On Job Training) அனுப்பும்போது, எந்த ஊருக்கு எவ்வளவு நாட்களுக்கு யார் யார் செல்கிறார்கள் என்ற விபரம் முன்கூட்டியே மகளிர் திட்ட செயலாக்க அலுவலகத்திற்கு அனுப்பி அனுமதி பெற வேண்டும்.
13. பயிற்சி பெறுவோருக்கான மதிப்பீடு தேர்வு நடத்தப்பட்டு NCVT/ SSC சான்றிதழ் வழங்கும் பொறுப்பு பயிற்சி நிறுவனத்தைச் சாரும். அதற்கென தனியாக தொகை வழங்கப்படமாட்டாது.

**பராமரிக்கவேண்டிய பதிவேடுகள்:-**

அ) பயிற்சியாளரின் விபரச்சுருக்கம் (Profile) மற்றும் பயிற்றுநர் அடிப்படை தகவல் பதிவேடு பயிற்சி நிறுவனத்தால் பராமரிக்கப்பட வேண்டும்.

ஆ) பயிற்சிக்கான பாடத்திட்டம் மற்றும் தினக்கால அட்டவணை அடிப்படையில் பயிற்சி நடத்தப்பட வேண்டும்.

இ) ஒவ்வொரு வாரமும் நடத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி திறனாய்வுத் தேர்வு வார இறுதி நாளில் நடத்தப்பட வேண்டும்.

ஈ) பயிற்சியாளர்கள் இடைநிற்றல் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

உ) பார்வையாளர் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

ஊ) பணி பெற்றோர் பற்றிய பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

எ) பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்ததை கண்காணிக்க (Placement Tracking Register) ஏதுவாக பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

**பயிற்சியாளர் ஊக்கத்தொகை:-**

1. பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிறுவனத் தொகை மற்றும் பயிற்சியாளருக்கான ஊக்கத் தொகையாக மொத்தம் நபர் ஒன்றுக்கு ரூ.15000/- வழங்கப்படும். இத்தொகையில் பயிற்சி நிறுவனத்தினர் அளித்துள்ள இசைவின்படி மாதம் ரூ.1000/-வீதம் 3 மாதங்களுக்கு மொத்தம் ரூ.3000/- பயிற்சியாளரது போக்குவரத்து செலவினத்திற்கு ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும். ஊக்கத்தொகை பெற்றதற்கான ஒப்புதல் பயிற்சியாளர்களிடம் பெற்று நகல் ஒன்றினை திட்ட செயலாக்க அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
2. நிறுவனக் கட்டணம் மற்றும் பயிற்சியாளர்களுக்கான உதவித் தொகை போன்றவை ECS மூலமாக வழங்கப்படும்.

**பயிற்சி நிறுவன தொகை:-**

1. பயிற்சி நிறுவனத்தொகை கீழ்க்கண்ட 6 தவணைகளில் வழங்கப்படும்.

| வ.எண் | விபரம் | தொகை (சதவீதத்தில்) |
|---|---|---|
| 1. | ஒரு மாத பயிற்சி முடிந்த பின் | 20% |
| 2. | இரண்டு மாத பயிற்சி முடிந்த பின் | 20% |
| 3. | மூன்று மாத பயிற்சி முடிந்த பின் | 20% |
| 4. | முழுமையாக பயிற்சி முடித்து பயிற்சியாளர்கள் மதிப்பீடு செய்து சான்றிதழ் கொடுத்த பின் | 10% |
| 5. | பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் வேலைவாய்ப்பை பெற்ற பின் | 20% |
| 6. | வேலைவாய்ப்பு பெற்றதனை தொடர்ந்து 6 மாதம் கண்காணிப்பு செய்த பின் | 10% |
| | **மொத்தம்** | **100%** |

2. ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு ரூ.1000/- வீதம் பயிற்சிக் காலத்திற்கு உதவித் தொகையினை (Stipend) A/C Payee காசோலையாகவோ அல்லது நேரடியாக பயிற்சியாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும். எனவே, பயிற்சியாளர்களிடமிருந்து வங்கி தொடர்பான விபரம், பயிற்சி துவங்கிய 7 தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்திட வேண்டும்.

3. இப்பயிற்சிக்காக எந்தவொரு கட்டணமும் எவ்வித காரணத்திற்காகவும் பயிற்சியாளரிடமோ அல்லது அவர்களின் பெற்றோர்களிடமோ பெறக்கூடாது. அவ்வாறு பெறப்பட்டது என பிற்காலத்தில் தெரிய வந்தால் பயிற்சி நிறுவனத்தின் மேல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலை வாய்ப்பு:-

1. பயிற்சி முடித்தவுடன் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் பணி வாய்ப்பின் மாதாந்திர ஊதியம் ரூ.6000/-க்கு குறையாமல் இருக்க வேண்டும்.
2. தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கக் கூடாது.
3. ஊதியம் சம்பந்தப்பட்டவரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
4. பயிற்சி முடித்து வேலைவாய்ப்பில் உள்ளவர்களை 6 மாதம் தொடர்ந்து பயிற்சி நிறுவனம் கண்காணிப்பு செய்திட வேண்டும்.

மேலும், பயிற்சி தொடர்பாக, திட்ட அலுவலர், ஊரக வாழ்வாதார இயக்கம் அவ்வப்போது கோரும் அறிக்கைகளை உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒம்./
மாவட்ட ஆட்சித்தலைவர்
மதுரை

பெறுநர்

Kalvi Trust Educate to Empower,
134, First Main Road, K.K.Nagar, Madurai-20

நகல்: மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை-34 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

9/8/17

இணை இயக்குநர்/திட்ட அலுவலர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார
இயக்கம், மதுரை

9-8-2017